# அன்பரின் ஊழியம்

ANBARIN OOZHIYAM

மலர் : 11 இதழ் : 01 ஜனவரி 2025 தனிபிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா- ரூ. 200/-
Vol : 11 Issue No : 01 January 2025 Single Copy - Rs. 20/- Annual Subscription - Rs. 200/-



நான்
உன்னைப் பத்திரமாய்ப்
பார்த்துக்கொள்வேன்.
எரேமியா 40:4


HAPPY
new
Year
Dr. Ananda Stira & Family

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 11 ♦ ஜனவரி 2025 ♦ இதழ் 1

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.**

- ஏசாயா 54:10

இந்த 2025-ம் வருடத்தில் மேற்கூறிய வசனத்தின்படியே கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக! பல சமயங்களில் இந்த வசனத்தை நீங்கள் கேட்டிருக்கலாம், வாசித்து இருக்கலாம். இது நமக்கு நன்கு தெரிந்த வசனம்தானே எனவும் நினைக்கலாம். ஆனால் இந்த வசனத்தில் நாம் படிக்கிறபடியே, இந்த வருடத்தில் நம் தேவனாகிய கர்த்தர் உலகமெங்கும் பயங்கரமான மாற்றங்களை கொண்டு வருவார். பூமியின் நிலப்பரப்பு முற்றிலுமாக மாறிப்போகும். மேற்கண்ட வசனத்தில் நீங்கள் பார்க்கிறபடி மலைகள் பர்வதங்கள் நிலைபெயர்ந்துபோகும். அவை கர்த்தரின் வருகை மிக மிக சமீபமாய் இருக்கின்றது என்பதையே அறிவுறுத்தும்.

இயேசுகிறிஸ்து கூறினபடி இதுவரைக்கும் இல்லாத உபத்திரவங்கள் வரும்நாட்களில் உண்டாகும். இருப்பினும் இவை எல்லாவற்றின் மத்தியிலும் கர்த்தர் உங்களுக்கு கோட்டையும் அரணுமாய் இருப்பார். அவர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் தப்புவிப்பார், கிருபையாய் வழிநடத்துவார், சமாதானத்தினால் நிரப்புவார். ஆகவே நடக்கயிருக்கும் காரியங்களைக் குறித்து பயப்படாதிருங்கள். கிறிஸ்துவை விட்டு வழி விலகி செல்லாதபடி எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் பிரதான நோக்கம் செயல்பாடு அனைத்துமே பரலோகம் செல்வதாய் இருக்க வேண்டும். கைவிடப்பட்டவர்களாய் இருக்கக்கூடாது.

**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627

Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.

Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

இந்த வருடத்தில் கர்த்தர் உங்களைக் கொண்டு அநேகரை இரட்சிக்கவும், அன்பரின் ஊழியத்துடன் இணைந்து செயல்படவும் ஜெபியுங்கள். ஊழியத்தை தாங்குங்கள்.

நம்முடைய ஊழியத்தின் மூலம் அநேக நேரலை நிகழ்ச்சிகள் அதிகரிக்கும்படி ஜெபியுங்கள். எங்களோடு இணைந்து செயல்பட அநேகர் உற்சாகமாய் முன்வரும்படி ஜெபியுங்கள்.

டிசம்பர் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். ஜனவரி மாதம் திருச்சி, மேற்கு தாம்பரம், நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, துறி ஆகிய இடங்களில் நடைபெறயிருக்கிற கூட்டங்களுக்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். இந்த கூட்டங்களை நடத்துவதற்கு நாம் பல இலட்சங்களை செலவு செய்கிறோம்.

நம்முடைய சமூக வளைதலங்கள் வாயிலாக அநேக புதிய நிகழ்ச்சிகள் புதிய பாடல்கள் வெளிவந்துள்ளது. மாதந்தோறும் நேரலை நிகழ்ச்சிகள் (Tamil - Telugu live) நடைபெற்று வருகிறது. தவறாமல் பாருங்கள். அநேகருக்கு share செய்யுங்கள். அந்த நிகழ்ச்சிகள் வாயிலாக ஆழமான சத்தியங்களை நீங்கள் அறிந்துக்கொள்ள முடியும். கர்த்தர் உங்களோடு பேசுவார்.

ஊழியத்திற்காக ஜெபிக்கிற தாங்குகிற நீங்கள் ஒவ்வொருவரும் ஊழியத்தின் தூண்களாக இருக்கிறீர்கள். உங்களுக்காக நாங்கள் அனைவரும் குடும்பமாக ஜெபிக்கிறோம். நீங்களும் எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், நீடிய ஆயுளுக்காகவும் ஜெபியுங்கள். எங்கள் அனைவருக்காகவும், திருச்சபை ஊழியத்திற்காகவும், மகனுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து வருஷத்தை நன்மையினால் முடிசூட்டி மகிழ்வாராக!

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org



# உங்களை பத்திரமாக பார்த்துக் கொள்வார்!



தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே, அன்பரின் ஊழிய வாசகர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த வருடம் முழுவதும் நம்மை பாதுகாத்த தேவன் தாமே இந்த புதிய வருடத்தில் நம்மை பிரவேசிக்கச் செய்த கிருபைக்காக அவரை மனதார ஸ்தோத்தரிப்போம். இந்த புதிய வருடத்தை கர்த்தரே நமக்கு நன்மையும் செம்மையுமாக அமைத்து கொடுப்பாராக!

இந்த ஆண்டில் ஆண்டவராகிய கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள் வேன். எரேமியா 40:4 இந்த வார்த்தை எதன் அடிப்படையில் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதை வேதத்தின் வாயிலாக பார்ப்போம்.

எருசலேமிலும், யூதேயாவிலும் சிறையாக பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டுப் போவதற்காக இருந்தவர்களில் எரேமியாவும் ஒருவனாக இருந்தான். இவன் விலங்கிடப்பட்ட நிலையில் பாபிலோனுக்கு கொண்டுப் போவதற்காக ஆயத்தம் பண்ணப்பட்டவன். ஆனால் காவற்சேனாதிபதி நேபுசராதான் கண்களில் இவனுக்கு விசேஷித்த தயவு கிடைத்தது. அதனால் விலங்கிடப்பட்டிருந்த இவனை சேனாதிபதி விடுதலையாக்கினான்.

அப்பொழுது அவன் கூறியது, இப்போதும், இதோ, உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப்போட்டேன்; என்னோடேகூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்மையாய்த் தோன்றினால் வா, நான் உன்னைப் பத்திர மாய்ப் பார்த்துக்கொள்வேன்; என்னோடேகூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்றாய்த் தோன்றா விட்டால், இருக்கட்டும்: இதோ, தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது, எவ்விடத்துக்குப் போக உனக்கு நன்மையும் செவ்வையுமாய் காண்கிறதோ அவ்விடத்துக்குப் போ என்றான். எரேமியா அவன் வாக்குக்கு செவி கொடுக்காமல் பாபிலோனுக்குப் போக மறுத்து, கெதலியா வினிடத்தில் போய், தேசத்தில் மீதியான ஜனங்களுக்குள் அவனோடே தங்கியிருந்தான். இதுதான் வரலாற்று பின்னணியாக சொல்லப் படுகிற காரியங்கள்.

இதை நாம் ஆதாரமாக எடுத்துக்கொண்டு இன்றைய காலச்சூழ்நிலையில் கர்த்தர் நம்மை எப்படி எல்லாம் பத்திரமாக பார்த்துக்கொள்வார் என்பதை இந்த செய்தியில் குறிப்பிட விரும்புகிறேன். பத்திரமாக பார்த்துக்கொள்வார் என்ற அந்த வாக்குத்தத்தத்தின் பொருளை நாம் சிந்திக்கும் பொழுது அங்கே ஒரு பாதுகாப்பு இருக்கிறது. பயம் நீங்குகிறது. புது நம்பிக்கை உண்டாகிறது.

## 1. சகல உபத்திரவங்களிலிருந்து அவர் உங்களை பத்திரமாய் பார்த்துக் கொள்வார்!

## He will preserve you from all tribulations

**உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது. (யோபு 30:16) உபத்திரவ நாட்கள் என்மேல் வந்தது. (யோபு 30:27)**

உபத்திரவங்கள் கஷ்டங்கள் பாடுகள் வேதனைகள் அங்கலாய்ப்புகள் இவை எல்லாம் மனித வாழ்க்கையிலே அவ்வப்போது வந்து போகிற காரியங்கள் ஆகும். இன்றைக்கு உலகத்தில் வாழும் எந்த ஒரு மனிதனும் எந்த ஒரு மனுஷியும் இவைகளிலிருந்து விடுபட முடியாது. நம் அனைவருக்கும் இது பொதுவான அன்றாட பிரச்சனையாகவே இருந்து வருகின்றது.

வேதத்தில் நாம் வாசிக்கிறபடி பக்தனாகிய யோபு இதையே குறிப்பிட்டு உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது என்றும் உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது என்றும் புலம்புகிறான்.

யோபு உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகவும் இருந்தவன், ஆஸ்தியும் ஐசுவரியமும் அளவில்லாமல் பெற்று வாழ்ந்த மிகப்பெரிய செல்வந்தன் என்பதையும் நாம் அறிவோம். கிழக்கத்திய புத்திரரில் யோபுவைப் போல வாழ்ந்தவர்கள் யாரும் இல்லை. அந்த அளவிற்கு திரளமான மிருக ஜீவன்களையும், ஏராளமான வேலைக்காரர்களையும் உடைய வனாக வாழ்ந்தவன். அவனுக்கு 7 குமாரர்களும், 3 குமாரத்திகளும் இருந்தார்கள். எல்லாவற்றையும் நிறைவாக பெற்றிருந்தவன் வாழ்வில் திடீரென உபத்திரவத்தின் நாட்கள் பிடித்துக்கொண்டது. எப்படியென்றால் ஒரே நாளில் தன் பிள்ளைகளை இழந்தான், மிருக ஜீவன்களை இழந்தான், சொத்துக்களை இழந்தான், சரீரத்தில் தாங்க முடியாத வேதனைகள், மனைவியின் ஏளன பேச்சுக்கள் அவனை உபத்திரவத்தின் உச்சத்திற்கே கொண்டு சென்றுவிட்டது. அடிக்கு மேல் அடி விழுவதுப்போல கஷ்டத்தின் மேல் கஷ்டம், உபத்திரவத்திற்கு மேல் உபத்திரவம் அடைந்த வனை கர்த்தர் கைவிடவில்லை.

நான் உன்னை பத்திரமாக பாதுகாத்துக் கொள்வேன் என்ற வாக்குத்தத்தத்தின்படி தேவன் தாமே யோபுவை பத்திரமாக பார்த்துக் கொண்டார். காரணம் இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவில்லை. தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை. (யோபு 1:22) அத்துடன் யோபுவின் ஜீவன் கர்த்தருடைய கையில் இருந்தது. ஆகவே அவனை உபத்திரவத்திலிருந்து பத்திரமாக மீட்டு, உபத்திரவத்தின் கட்டுகளை உடைத்து, அற்புதமாக விடுதலையாக்கி, இரட்டிப் பான நன்மைகளைத் தந்து ஆசீர்வதித்தார்.

**யோபுக்கு முன் இருந்த எல்லா வற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனை யாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். (யோபு 42:10)**

கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார், அவன் இழந்தது அனைத்

தையும் இரட்டிப்பாய் தந்தார். எப்படியென்றால் ஏழாயிரம் ஆடுகளுக்குப் பதில் பதினாலாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களுக்குப் பதில் ஆறாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளுக்குப் பதில் ஆயிரம் ஏர்மாடு களும், ஐந்நூறு கழுதைகளுக்குப் பதில் ஆயிரம் கழுதைகளும் அவனுக்கு உண்டாயின. ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள். யோபுவின் குமாரத்திகளைப் போல் சௌந்தரியமான பெண்கள் தேசத்தில் எங்கும் காணப்படவில்லை. இழந்ததை எல்லாம் மீண்டுமாக பெற்றுக்கொண்ட யோபுவின் வாழ்வில் பாதுகாப்பு உண்டாகியது, பயம் நீங்கியது, ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது.

பிரியமானவர்களே, இன்றைய கால சூழ்நிலையில் ஒருவேளை நீங்களும் பல்வேறு உபத்திரவத்தினால் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறீர் களா? கலங்காதீர்கள், கர்த்தர் இந்த புதிய ஆண்டில் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள் வார். அவருடைய கண்கள் உங்கள் சூழ்நிலையை உபத்திரவங்களை பார்த்துக்கொண்டிருக்கிறது. யோபு தன் வாழ்வில் இழந்ததை இரட்டிப்பாக பெற்றுக்கொண்டது போல நீங்களும் இழந்த சமாதானத்தை, நல்வாழ்வை மீண்டும் இரட்டிப்பாக பெற்றுக்கொள்ள உதவி செய்வார். இயேசு தம் சீஷர்களிடம், ... உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். யோவான் 16:33-ன் படியே உலகத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து உங்களோடு இருந்து உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்.

## 2. சகல வியாதிகளிலிருந்து அவர் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்.

## He will preserve you from all diseases

**நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்தி. 15:26)**

**வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். (யாத்தி. 23:25)**

மேற்கண்ட இரண்டு வசனங்களிலும் கர்த்தராகிய ஆண்டவர் தம் பிள்ளைகளை வியாதி யிலிருந்து பாதுகாப்பேன் என சொல்லியிருக்கிறார். இன்றைய நவீன உலகத்தில் புது புது வியாதிகள் மனிதர்களை தாக்குவது இயல்பான காரியமாக இருந்து வருகிறது. நம்முடைய உணவு பழக்க வழக்கங்கள், அன்றாட பிரச்சனைகளால் உண்டாகிற மன அழுத்தங்கள் மற்றும் பல தீய பாவ பழக்கங்களின் வாயிலாகவும் வியாதிகள் வந்துக்கொண்டிருக்கிறது. மாம்சத்தில் இருக்கிற அத்தனை மனிதர்களும் ஏதோ ஒரு வியாதியினால் பாதிக்கப்பட்டு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எத்தகைய வியாதியாக இருந்தாலும் அதை சுகமாக்கக்கூடிய வல்லமை நம் ஆண்டவரிடத்தில் உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

அந்நாட்களில் எசேக்கியா வியாதிப் பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான், அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில்

வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்க மாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். (ஏசாயா 38:1) …அவன் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணும் போது, அவர் அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணி, அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார். (2நாளா.32:24)

இங்கே எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருந்தப்பொழுது, தீர்க்க தரிசியாகிய ஏசாயாவின் வார்த்தையைக் கேட்டு, எசேக்கியா ராஜா சுவர்ப்புறமாகத் திரும்பிக் கொண்டு, தேவனை நோக்கி மிகவும் அழுது ஜெபம் பண்ணினான். அவன் ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் அவனுக்கு மீண்டும் 15 ஆண்டுகளை கூட்டிக் கொடுத்தார். உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன், இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். ஏசா.38:5

இந்த சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், நமக்கு வரக்கூடிய எந்த வியாதியாக இருந்தாலும், அது மரண வியாதியாக இருந்தாலும் நாம் அதை மேற்கொள்ள கர்த்தர் பெலன் தருவார், நம்மை பத்திரமாக பார்த்துக் கொள்வார். ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். மத்.4:23 மத்தேயு என்ற ஆக்கியோன் எழுதியுள்ள இந்த வசனத்தை உற்று நோக்கும் பொழுது, இயேசுகிறிஸ்து சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி நம்மை சொஸ்தப் படுத்தி, பத்திரமாக பாதுகாத்துக் கொள்வார் என்ற பெரிய உத்தரவாதத்தை நமக்கு தருகிறது. அதனால் பயம் நீங்குகிறது, புதிய நம்பிக்கை நமக்கு உண்டாகிறது.

## 3. பிசாசின் கிரியைகளிலிருந்து அவர் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்!

## He will preserve you from the works of the devil

**… உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். (1பேதுரு 5:8)**

பிசாசின் நோக்கம் நம்மை செயலற்றுப் போகச் செய்து, அப்படியே விழுங்க நினைப்பது ஆகும். எப்படியென்றால் நம்முடைய குடும்ப வாழ்வில், நம் பிள்ளைகளின் வாழ்வில், நாம் செய்கிற தொழிலில், வேலையில் பல்வேறு பிரச்சனைகளைக் கொண்டுவந்து நம்மை ஒன்று மில்லாமல் வெறுமையாக்குவதே அவனுடைய திட்டமாக இருக்கிறது. நாம் ஜெபத்தில், விசுவாசத்தில் நன்கு வளர முடியாதபடி நமக்கு முன் பல தடைகளை வைத்து ஆவிக்குரிய ஜீவியத்திலும் முன்னேறாதபடி சூழ்ச்சி செய்கிற வனாக இருக்கிறான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். யோவான் 10:10. பிசாசானவன் ஆதி முதல் மனுஷகொலை பாதகனாயிருக்கிறான். இவனுடைய கையி லிருந்து கர்த்தர் நம்மை பாதுகாத்து, ஜீவனோடு இருக்க உதவி செய்கிறார். இந்த பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1யோவான் 3:8) பிசாசின் கையிலிருந்து நம்மை விடுதலையாக்கும்படிக்கே நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்திற்கு வந்தார்.

மாற்கு 5:1-20 வரையுள்ள வசனங்களில் அசுத்த ஆவியினால் கட்டப்பட்டிருந்த ஒரு மனிதனைக் குறித்து பார்க்கிறோம். அவனுடைய குடியிருப்பு கல்லறையாக இருந்தது. கையில் சங்கிலி போடப்பட்டு, யாராலும் அடக்க முடியாத வனாய், இரவும் பகலும் கூக்குரலிட்டுக் கொண்டு, கல்லுகளினாலே தன்னை காயப்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்தான். பிசாசினால் ஆட்கொள்ளப் பட்டிருந்த இந்த ஒரு மனிதனைத் தேடி இயேசு அக்கரையிலிருந்து இக்கரைக்கு பிரயாணம் செய்து அங்கு வந்தார். அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லியிருந்தார். மாற்கு 5:8 சொன்ன மாத்திரத்தில் அசுத்த ஆவி அவனை விட்டுவிலகி அவன் புத்தி தெளிந்து, வஸ்திரம் தரித்து புதுநம்பிக்கையைப் பெற்று, 10 பட்டணங்களுக்குச் சென்று இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தான். இவ்வாறு அவனுக்குள்ளிருந்த அசுத்த ஆவியின் கிரியைகளை இயேசு அதட்டி அவனை விடுதலையாக்கி பத்திரமாய் பார்த்துக் கொண்டார். அவனைச் சுற்றியிருந்த பயம், திகில் நீங்கியது, நம்பிக்கை உதயமானது.

ஆம் பிரியமானவர்களே, உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர். ஆகவே பிசாசின் ஆக்ரோஷமான செயல்களைக் கண்டு மனங்கலங்காதீர்கள். பிசாசை ஜெயித்தவர் உங்களோடு இருக்கிறார். உங்களை ஒரு நாளும் கைவிடமாட்டார். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிபோவான். யாக்கோபு 4:7 பிசாசுக்கு நாம் எதிர்த்து நிற்கும்போது அவன் நம் எல்லையை விட்டு ஓடிப்போவான். பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள், ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். 1யோவான் 4:4. நீங்கள் எதற்கும் கலங்க வேண்டாம். பிசாசைக்காட்டிலும் பெரியவரா யிருக்கிற கர்த்தர் உங்களை அனைத்து பிசாசின் கிரியை களிலிருந்தும் விடுதலையாக்கி பத்திரமாய் பார்த்துக் கொள்வார்.

## 4. சத்துருக்களின் கையிலிருந்து அவர் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்.
## He will preserve you from the hands of enemies

**கர்த்தாவே என் சத்துருக்கள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர். (சங்.3:1)**

இது சங்கீதக்காரனாகிய தாவீது சொல்லு கின்ற ஒரு புலம்பலாக இருக்கிறது. தாவீது தன் குமாரன் அப்சலோமுக்கு பயந்து ஓடினபொழுது பாடின சங்கீதம் இது. ஆம், மெய்யாகவே தாவீதின் வாழ்வில் எப்பக்கத்திலும் சத்துருக்கள் தான் காணப்பட்டார்கள். இவன் வாலிபவயதில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தப்பொழுது, தன் தகப்பன் மற்றும் தன் சகோதரர்களால் அற்பமாக எண்ணப்பட்டு புறக்கணிக்கப்பட்டவனாய் ஆரம்பத்தில் சாமுவேலினிடத்தில் அழைக்கப் படாதவனாய் இருந்தான். தாவீது கோலியாத்தை வீழ்த்தினபொழுது மக்கள் அனைவரும் "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என பாடினார்கள். இதனால் பொறாமைக் கொண்ட சவுல், தாவீதை கொலை செய்ய அவனை தேடி விரட்டிக்கொண்டே

இருந்தான். ஒரு தெள்ளுப்பூச்சியை வேட்டை யாடுவதுப் போல தாவீதை வேட்டையாடினான். இப்போதும் கர்த்தருடைய சமுகத்தில் என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக. மலை களில் ஒரு கவுதாரியை வேட்டையாடுகிறது போல, இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப் பூச்சியைத் தேட வந்தாரோ என்றான். 1சாமு.26:20.

தாவீது ராஜா பதவிக்கு வந்தப்பொழுதும் சுற்றிலும் உள்ள ராஜாக்கள் அவனுக்கு சத்துருக் களாகவே இருந்தார்கள். எல்லா இடங்களிலும் போர், யுத்தம். ஆனால் தாவீது சென்ற இடமெல்லாம் கர்த்தர் அவனை பாதுகாத்தார். தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனை காப்பாற்றினார். 2சாமுவேல் 8:14 தாவீது சென்ற இடமெல்லாம் வெற்றியை கொடுத்தார். கர்த்தர் தாவீதுடன் இருந்தார். தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான். சேனை களின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார். (2சாமு.5:10) அவன் செய்த யுத்தங்களினால் ஆண்டவராகிய கர்த்தர் தாவீதிடம் உன் கரங்கள் இரத்தம் படிந்த கரங்களாக இருப்பதால் நீ எனக்கு தேவாலயத்தை கட்ட வேண்டாம் தேவாலயத்தை கட்டுவதற்கான அனைத்து பொருட்களையும் தாவீது சவதரித்து வைத்திருந்தாலும், அவனுடைய மகனாகிய சாலொமோனே தேவாலயத்தை கட்டுவதற்கு கர்த்தர் அனுமதி கொடுத்தார். அந்த அளவிற்கு அவனுக்கு சத்துருக்கள் சூழ்ந்திருந்ததை வேதத்தின் வாயிலாக நாம் அறிவோம். என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப் படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும். சங்.31:15 என்று தாவீது விண்ணப்பம் செய்வதைப் பார்க்கிறோம்.

...ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள், ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள். உபா.28:7.

பிரியமானவர்களே, உங்களுக்கு விரோதமாக பல சத்துருக்கள் எழும்பி வரலாம். ஒரு வேளை உங்கள் குடும்பத்தில், வேலை ஸ்தலத்தில், அல்லது அருகில் உள்ளவர்களால் என ஏதோ ஒரு வழியில் சத்துருக்கள் எழும்பி வந்திருக்கலாம். சோர்ந்து போகாதீர்கள். தாவீதை பத்திரமாக பாதுகாத்து, அனைத்து பயத்திற்கும் நீங்கலாக்கி, அவனுடைய ராஜாங்கத்தை ஸ்திரப்படுத்தி ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தின கர்த்தர் இன்றைக்கு உங்களையும் சத்துருக்களுக்கு விலக்கி பத்திரமாக பார்த்துக்கொள்வார். வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். ஏசா.59:19 ஆகவே நீங்கள் பயப்படவேண்டாம். எந்த பாதுகாப்பும் இல்லாத சூழலில் கர்த்தர் உங்களுக்கு பாதுகாப்பைத் தந்து எதிர்காலத்தைக் குறித்த பயத்தை நீக்கி, நம்பிக்கையை தந்து பெலப்படுத்துவார்.

## 5. நித்திய நரக ஆக்கினை யிலிருந்து அவர் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்! He will preserve you from the eternal hell fire

உலகத்திலே வாழும் எல்லா மனிதர் களுக்கும் மரணம் ஒரு நாள் நிச்சயம். ஆனால் அந்த மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பதுதான் கிறிஸ்துவை உடையவர்களாகிய நமக்கு கிடைத்துள்ள பெரிய பாக்கியம் ஆகும். கிறிஸ்துவை நம்பாதவர்கள் மரணத்திற்குப் பிறகு

நித்திய ஜீவனை பெற முடியாமல், நித்திய ஆக்கினையை பெறுகிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆண்டவராகிய கர்த்தர் தம் சாயலில் படைக்கப்பட்ட மனிதர்களை அளவில்லாமல் நேசிக்கிறார். ஆகவே அவனை நரக ஆக்கினைக்கு விலக்கி, பத்திரமாக பாதுகாத்து நித்திய ஜீவனை கொடுப்பதே அவருடைய நோக்கமாக இருக்கிறது. ஆனால் மனிதன் பாவம் செய்தப்பொழுதும், பல தவறுகளை செய்தப்பொழுதும் நித்திய ஜீவனை இழந்து நித்திய ஆக்கினைக்கு உட்பட்டவனாகி விடுகிறான். அந்த நித்திய ஆக்கினையிலிருந்து மீட்டெடுக்கவே கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார். (மத்.18:11) பாவிகளை இரட்சிக்கவே இயேசுகிறிஸ்து மனிதனாகவும் வந்தார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. (1தீமோ.1:15)

தேவன் தம் குமாரனை விசுவாசிக்கிற அனைவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை பெறும்படிக்கு இயேசுவை நமக்கு தந்தருளினார். (யோவான் 3:15-18) கிறிஸ்துவை விசுவாசிக்கக்கூடியவர்களை நித்திய நரக ஆக்கினையிலிருந்து பாதுகாத்து நித்திய ஜீவனை பெறும்படி செய்கிறார். அதனால் கடைசி காலத்தைக் குறித்த பயம் நீங்குகிறது. இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பு இல்லை என்ற நம்பிக்கை உண்டாகிறது.

லூக்கா 15-ம் அதிகாரத்தில் இயேசு கூறிய உவமையில் வருகிற இளைய குமாரனைப் பற்றி நாம் நன்கு அறிவோம். இளைய குமாரன் தன் தகப்பன் அன்பை விட்டு தூர தேசம் சென்று துன்மார்க்கமாய் ஜீவனம் செய்து, பாவத்தில் விழுந்து, நரக ஆக்கினைக்கு உட்பட்டவனாய் இருந்தான். இறுதியில் அவன் தன் தவற்றை உணர்ந்து மனந்திரும்பி அன்புள்ள தகப்பனைத் தேடி வந்தபடியால் பாவ மன்னிப்பை பெற்று நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொண்டான். இந்த புதிய ஆண்டில் நீங்களும் பழைய பாவ வழிகளைவிட்டு கிறிஸ்துவின் சிலுவை அன்பை உணர்ந்து அவரிடம் வரும்பொழுது உங்களையும் நித்திய ஆக்கினைக்கு விலக்கி பாதுகாத்து கொள்வார்.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே, இந்த புதிய வருடத்தில் ஆண்டவராகிய கர்த்தர் உங்களுக்கு அருளிய இந்த வாக்குத்தத்தத்தை சுதந்தரிப்பதற்கு, அவருக்கு பிரியமாக வாழ்ந்து, கர்த்தரின் கரங்களில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன். எரேமியா 40:4 என்ற வாக்குத்தத்தத்தை கொடுத்தவர் நிச்சயமாக இந்த ஆண்டு மாத்திரமல்ல, பூமியில் நீங்கள் வாழுகின்ற காலம் வரைக்கும் சகல உபத்திரவங்களிலிருந்தும் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார், சகல வியாதிகளிலிருந்தும் உங்களை பத்திரமாக பார்த்துக் கொள்வார், சகல பிசாசின் பிடியிலிருந்தும் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார், சகல சத்துருக்களின் கையிலிருந்தும் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார், அதுமட்டுமல்லாது நித்திய நரக ஆக்கினையிலிருந்தும் உங்களை பத்திரமாக பார்த்துக்கொள்வார்.

இந்த ஆசீர்வாதமான பாக்கியங்களை இந்த புதிய ஆண்டில் நீங்கள் பெற்று மகிழும்படியாக தேவன் உங்களுக்கு அருள் செய்வாராக! தேவ கிருபை, தேவ ஆசீர்வாதம் என்றென்றும் உங்கள் வாழ்வில் நிலைத்திருப்பதாக!

# 2025 ஜனவரி மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். (சங்.46:1)

02 … நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன். (எரே. 40:4)

03 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். (சங்.91:15)

04 மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டுவிலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 54:10)

05 … உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

06 நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். (ஆதி. 12:2)

07 கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார். (உபா. 28:8)

08 நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும். (நீதி.10:6)

09 உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசா.44:3)

10 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக. (சங்.134:3)

11 வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. (ஆதி.14:19)

12 கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி.10:22)

13 நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். (1பேதுரு 3:9)

14 சகல ஜனங்களைப்பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். (உபா.7:14)

15 அவர் உயரவானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார். (ஆதி.49:25)

16 கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். (எண்.6:24)

17 உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். (யாத்தி.23:25)

18 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கும்படி கொடுக்கும் தேசத்தில், உன்னை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். (உபா.15:5)

19 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார். (சங்.29:11)

20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். (நீதி.28:20)

21 கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். (சங்.115:13)

22 இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். (எண்.24:1)

23 நீ ஆசீர்வதிக்கப்பட்டவன். நீ பெரியகாரியங்களைச் செய்வாய்; மேன்மேலும் பலப்படுவாய். (1சாமு.26:25)

24 பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். (ஆதி.12:3)

25 உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார். (உபா.15:10)

26 கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார். (சங்.115:12)

27 உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை ஆசீர்வதிப்பதினால், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், (உபா.15:6)

28 கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார். (சங்.115:12)

29 நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்.3:10)

30 அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபே.1:3)

31 கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார். (சங்.121:8)

# 2025 புத்தாண்டிற்கான வல்லமையுள்ள ஜெபம்!

வானதி வானங்களுக்கு மேலாக உயர்ந்திருக்கிற உன்னதமான ஒரே ஒரு தேவனாகிய எங்கள் கர்த்தாவே! மகிமையும், மாட்சிமையும் நிறைந்த சர்வ வல்லவரே! கர்த்தாதி கர்த்தாவே! இந்த ஆண்டின் முதல் நாளில் உம்மை நான் துதிக்கிறேன்! போற்றுகிறேன்! உமக்கே கனமும் மகிமையும், துதியும், ஞானமும், வல்லமையும் உரித்தாவதாக! நீர் எங்களுக்காக உலகிற்கு அனுப்பிய எம் இரட்சகராகிய இயேசுவிற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். உம்முடைய மிகுந்த தயையினாலும், கிருபையினாலும், நீர் எங்களுக்கு கொடுத்த உமது பரிசுத்த வேதாகமத்திற்காகவும் நன்றி கூறுகிறேன்.

எங்கள் அன்பின் தேவனே! விண்ணிலும், மண்ணிலும் நீர் ஒருவரே சகலத்தையும் ஆளுகிறவர். உமது அளவு கடந்த ஞானத்தினாலும், வல்லமையுள்ள வார்த்தையினாலும், ஜீவ ராசிகளுக்கு எல்லாம் சுவாசத்தையும், நீடித்த ஆயுளையும் நல்ல மழையையும், சூரிய ஒளியையும் அவர் தம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் இடைவிடாமல் தருவதற்காக உமக்கு கோடி நன்றி கூறுகிறேன். இப்போதும் கர்த்தாவே! சகலத்தையும் ஆண்டு நடத்துகிற மகா உன்னதமான ராஜாவே! சிறுமையும், எளிமையுமான நான் மிகுந்த பணிவன்போடு உம்முடைய சமூகத்திற்கு வந்திருக்கிறேன். எனக்கும் என் குடும்பத்திற்கும் நீரே அடைக்கலமும் தயாபரரும், சகலத்தையும் நன்மையாக செய்து முடிக்கின்ற தேவனாக இருக்கின்றீர். "உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள் போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது" சங்கீதம் 90: 4

தேவனே, இந்த வருடத்தின் முதல் நாளில் அடியெடுத்து வைக்கிற நான் மிகுந்த நடுக்கத்தோடும் பயத்தோடும் காணப்படுகிறேன். ஏனெனில், அடுத்த நிமிடம் என்ன நடக்குமென்று எனக்கு தெரியாது. எனக்கு உம்மையன்றி வேறு துணை ஏதுமில்லை. ஆகவே, உம்மைப் பற்றிப்பிடிக்கிறேன்.

உமது கரம் ஒவ்வொரு நிமிடமும் என்னோடு இருக்க வேண்டும். இடங்கொள்ளாமற்போகு மட்டும் என்னையும், என் குடும்பத்தினரையும் என்னை சூழ கஷ்டப்படுகிற அனைவரையும் நீர் ஆசீர்வதியும். என் ஆசீர்வாதத்தின் எல்லையை பெருகச்செய்யும். பாவ சோதனையில் நான் வீழ்ந்துவிடாதபடி என்னை விலக்கிக்காத்தருளும். தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு உமது செட்டையின் மறைவில் என்னையும், என்னை சார்ந்தவர்களையும் வைத்துக்கொள்ளும். கண்மணியைப் போல என்னை காத்து என்னை தூக்கி சுமந்து என் பாதைகளை வெளிச்சமாக்கி, உமது ஆலோசனையின்படி என்னை நடத்தி முடிவில் வெற்றியின் வாழ்க்கையை எனக்குத் தாரும்.

கடந்த ஆண்டில் எனக்கு விரோதமாய் இருந்த அனைவரும் என்னோடு சமாதானமாகும்படி செய்யும். கடந்த ஆண்டில் நான் அனுபவித்த இக்கட்டுகள் சோர்வுகள், தோல்விகள், எதிர்பாராத துயரமான சம்பவங்கள், வீழ்ச்சிகள் அனைத்தும் மறக்கப்பட்டு, இந்த புதிய ஆண்டில் ஒரு ஜெயமுள்ள வாழ்க்கையை தாரும்.

என் காலடிகளை வழுவாமல் காத்து உம்முடைய காருணியத்தால் என்னை உயர்த்தும். மிகுந்த ஞானத்தையும் பரிபூரணமான உமது கிருபையையும், இரக்கத்தையும், தயவையும் எனக்குத் தந்து, பிறருக்கு நான் ஒரு நம்பிக்கையின் நட்சத்திரமாக திகழ அநுக்கிரகம் செய்யும். உம்முடைய பரிசுத்த வேதாகமத்தை அதிகமாய் நேசிக்கச் செய்யும். பரிசுத்த ஆவியானவரால் நான் உள்ளான மனுஷனில் வளர உதவி

வருஷத்தை உம்முடைய நன்மையால முடிசூட்டுகிறீர்! உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது. (சங்.65:11)

என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும். (யாத்.33:14)

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை, நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம். (உபாகமம் 31:8)

செய்யும். விசுவாசத்தில் நீர் என்னோடு எப்பொழுதும் இருந்து வழிநடத்தும். உம்முடைய அளவு கடந்த அன்பினால் நான் நிரப்பப்படவும் எனக்கு அநுக்கிரகம் செய்யும்.

கடந்த காலத்தில் என்னை பாதித்த நோய்கள், கடன் பாரங்கள், வேலையில்லா திண்டாட்டங்கள், குழந்தையில்லா தன்மை, முதிர் வயதில் வரும் நோய்கள், வீடு வாசல் இல்லாமை, வியாபார வீழ்ச்சி அனைத்தையும் நீக்கியருளும். ஜலப் பிரவாகத்திலிருந்து என்னை தூக்கி எடுத்தருளும்.

என் கால்களை மான் கால்களை போலாக்கி என் ஆவிக்குரிய, உலகப் பிரகாரமான வழிகளை சீராக்கும். சத்துருவாகிய சாத்தானின் எல்லாவித சோதனைகளுக்கும், தீய சக்திகளுக்கும், பொறாமையின் சூழ்ச்சிகளுக்கும் என்னை விலக்கிக் காரும். நான் செய்யும் வேலையை, விவசாயத்தை, அரசு வேலையையும், தனியார் வேலையையும், வீட்டு காரியங்களையும் செய்ய எனக்கு ஞானத்தை தந்தருளும். யோசேப்பைபோலநான்செய்வதெல்லாம்வாய்க்கும்படிசெய்து, அவற்றில் நூறு மடங்கு ஆசீர்வாதத்தை நான் காணும்படிக்கு எனக்கு ஒத்தாசை செய்யும். என் போக்கிலும், வரத்திலும், வாகனங்களில் நான் செய்யும் அனைத்து பயணங்களிலும், என் நடை பயணங்களிலும், எல்லா தீங்குக்கும், சடுதியான ஆபத்திற்கும் என்னை விலக்கிக்காத்தருளும்.

அனைத்திற்கும் மேலாக உமது அன்பிலும், விசுவாசத்திலும், வேததியானத்திலும், நிறைவான அபிஷேகத்திலும் வளர எனக்கு அருள் செய்யும். நான் போகின்ற (நடத்துகின்ற) சபைகள், நற்செய்தி கூட்டங்கள், வீட்டு ஜெப கூட்டங்கள், சுவிசேஷ கூட்டங்கள், மிஷனரி பயணங்கள் எல்லாவற்றிலும் உம்முடைய அளவு கடந்த வல்லமையும், இரட்சிப்பும் பெருகும்படி செய்யும். கடந்த வருடங்களைவிட இந்த வருடம் உலகப்பிரகாரமான வாழ்க்கையிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் உமக்கு சாட்சியாக வாழ உதவி செய்யும்.

உலகமெங்கும் நடைபெறுகிற யுத்தங்களுக்கும், சண்டைகளுக்கும், இயற்கை சீற்றங்களுக்கும், துஷ்ட மனுஷர்களுடைய கோஷங்களுக்கும் என்னை விலக்கிக் காத்தருளும். கடந்த காலங்களில் நான் அடைந்த சிறையிருப்புகளை மாற்றி யோபை போல இரட்டிப்பான நன்மையை அருளும். இயேசுவின் இரகசிய வருகைக்கு என்னை ஆயத்தமாக்கும்.

கிறிஸ்துவின் சிலுவை அன்பை நான் காண்கிற அனைவருக்கும் தைரியமாக எடுத்துச்சொல்லி உண்மையான ஊழியங்களை செய்கிற உம்முடைய ஊழியர்களுக்கும், ஏழை மக்களுக்கும் நான் அதிகமாக உதவி செய்ய என் கரங்களை பலப்படுத்தும். எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய அதிசீக்கிரமாய் வரப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறேன் அன்பின் பிதாவே! ஆமென்.

(யோசுவா 1:5,9; சங்கீதம் 85:12; சகரியா 9:12; சங்கீதம் 90:15; எரேமியா 32:41; மத்தேயு 28:20; 1தெச. 5:23,24; யூதா 24,25; சங்கீதம் 1:3; ஏசாயா 41:10,14; எபேசியர் 1:3; சங்கீதம் 121:7,8; (யோபு 5:9)

(அன்பான வாசகர்களே நீங்கள் ஒவ்வொருவரும் இந்த ஜெபத்தை தவறாமல் ஏறெடுக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்)






## சிறுவயதிலேயே கர்த்தர் தெரிந்துக்கொண்டார்!



என் பெயர் சத்யபிரபா. எனக்கு சிறுவயதிலிருந்தே வீசிங் பிரச்சனை இருந்தது. நான் இரண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தப் பொழுது சிவகங்கையில் விடுதலை பெருவிழா கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு நானும் என் அப்பாவும் வந்திருந்து ஒரு மரத்தின் அடியில் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தோம்.

கூட்டத்தின் இறுதியில் ஜெப நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் தீர்க்கதரிசனமாக, இந்த கூட்டத்திற்கு வந்திருந்து மரத்தின் அடியில் நின்று ஜெபித்துக்கொண்டிருக்கிற ஒரு தந்தை, ஒரு மகளை கர்த்தர் காட்டுகிறார். அந்த மகளுக்கு இருக்கிற வீசிங் பிரச்சனையை கர்த்தர் நீக்கி சொஸ்தமாக்குமாக்குகிறார். எதிர் காலத்தில் அந்த மகள் கர்த்தருக்கு ஊழியம் செய்வாள் எனச் சொன்னார்கள். சகோதரர் சொன்னபடியே கர்த்தர் என்னை சுகமாக்கினார். அந்த நாளிலிருந்து எனக்கு வீசிங் பிரச்சனையே இல்லை. தற்பொழுது திருமணமாகி நானும் என் கணவரும் குள்ளம்பட்டி என்ற இடத்தில் திருச்சபை ஊழியம் செய்து வருகிறோம். சிறு வயதிலேயே என்னை தெரிந்துக் கொண்ட கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

– திருமதி. சத்யபிரபா, அருப்புக்கோட்டை.

## கர்த்தர் விடுதலையாக்கினார்!



நாங்கள் பிசாசின் போராட்டத்தினால் அதிக கஷ்டப்பட்டோம். கடந்தமுறை அருப்புக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் எங்களுக்காக ஊக்கமாய் ஜெபித்து அனுப்பினார்கள். கர்த்தர் தாமே எங்களை மரண இருளின் போராட்டத்திலிருந்தும், பிசாசின் போராட்டத்திலிருந்தும் விடுதலையாக்கினார். ஐயாவின் ஜெபத்தின் மூலமாக என் பிள்ளைகள் இருவருக்கும் நல்ல வேலை கிடைத்தது. அதற்காக கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன். ஐயாவின் வல்லமை நிறைந்த ஜெபத்திற்காக நன்றி கூறுகிறேன்.

– திருமதி. சரோஜினி, அருப்புக்கோட்டை.

## கால் வலி நீங்கியது!



கடந்த 7 மாதங்களாக பயங்கரமான கால் வலியினால் அதிக கஷ்டங்களை அனுபவித்து வந்தேன். அதனால் இரவில் தூக்கம் இல்லை. அதற்காக பல சிகிச்சைகள் எடுத்தும் பயன் இல்லை. நான் ஜெபித்து மற்றவர்கள் விடுதலையானார்கள். ஆனால் எனக்கு விடுதலை இல்லையே என கவலையுடன் இருந்தேன். அக்டோபர் மாதம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு பொருத்தனையோடு ஜெபித்தேன். Mrs.மார்கிரேட் ஸ்திரா அவர்களும் எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் ஒரு சில நாட்களில் கால்வலி முற்றிலும் நீங்கியது. தற்பொழுது பரிபூரண சுகத்துடன் இருக்கிறேன். எனக்கு அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரைத் துதிக்கிறேன்.

- திருமதி. ஜமுனாராணி, விழுப்புரம்.

## நல்ல வேலை கிடைத்தது!



திருச்சியில் அக்டோபர் மாதம் நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டேன். எங்களுக்கு நல்ல வீடு வேண்டும், என் கணவருக்கு நல்ல வேலை வேண்டும் என பொருத்தனையோடு ஜெபித்து சென்றேன். ஐயா, அம்மாவிடம் அதற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். அவர்களும் ஜெபித்து விட்டு கர்த்தர் அற்புதம் செய்வார் என சொன்னார்கள். நான் கூட்டத்திற்கு வந்த அந்த நாளில் தான் என் கணவருக்கு இன்டர்வியூ இருந்தது. ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் என் கணவருக்கு ஜோசப் கல்லூரியில் வேலை கிடைக்கும்படி அற்புதம் செய்தார். திருச்சியில் நல்ல வீடு கிடைக்கவும் கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

- திருமதி. கீதா, திருச்சி.


We Are Hiring!!

PRAYER WARRIORS

Language Known

Tamil-Malayalam

Tamil- Telugu

ministryofjesushr@gmail.com



Male / Female || Christians Preferred

# செய்வினைக் கட்டிலிருந்து விடுதலை!



2010-ம் வருடத்திலிருந்து நாங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இருந்து வருகிறோம். எங்கள் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம். சொந்த வீடு இல்லாமல் இருந்தேன். Dr.ஆனந்த ஸ்திரா ஐயா அவர்களிடம் வீட்டிற்காக ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தரின் கிருபையால் கடன் இல்லாமல் வீட்டை கட்டி முடிக்க கர்த்தர் உதவி செய்தார்.

எங்கள் உறவினர் பொறாமையால் எங்களுக்கு செய்வினை செய்தனர். அதனால் என் மகன் 11-ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தப்பொழுது வீட்டை விட்டு போய்விட்டான். மகனுக்காக ஜெபிக்கும்படி ஐயாவிடம் சொன்னேன். ஐயா ஜெபித்துவிட்டு இந்த தேதியில் மகன் வீட்டிற்கு வந்துவிடுவான் என சொல்லி அனுப்பினார்கள். அதன்படியே அந்த தேதியில் எங்கள் மகன் வீடு வந்து சேர்ந்தான்.

நான் டிரைவர் வேலை செய்து வருகிறேன். செய்வினை பிரச்சனையால் என் காலில் அடிபட்டு நடக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். அதற்காகவும் ஐயா ஜெபித்தார்கள். அதன்பின் நான் பரிபூரண சுகம் பெற்றேன். அந்த செய்வினை கட்டிலிருந்தும் கர்த்தர் தாமே எங்களை விடுதலையாக்கினார். என் மகள் நர்சிங் படித்து merit-ல் பாஸாக கர்த்தர் தயை செய்தார்.

எங்கள் குடும்பத்திற்கு கர்த்தர் செய்த அனைத்து நன்மையான காரியங்களுக்காகவும் கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஐயா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திரு. அந்தோணிசாமி, சிவகங்கை.

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரங்கள்

தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

NAMBIKKAI TELEVISION

வெள்ளி. சனி. ஞாயிறு

8:30PM to 9:00PM

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADHANA TV

வியாழன். வெள்ளி

7:00PM to 7:30PM

Malayalam Whats App No. +91 94889 32937

## கர்த்தர் 3 அற்புதங்கள் செய்தார்!



கடந்த ஆகஸ்ட் மாதம் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு முதன்முறையாக நானும் என் கணவரும் வந்திருந்தோம். என் கணவருடைய நெஞ்சு பகுதிக்கும் வயிற்று பகுதிக்கும் நடுவில் ஒருவித எரிச்சல் நீண்ட நாட்களாக இருந்தது. தனி ஜெப நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என் கணவருக்காக ஜெபித்தார்கள். ஜெபத்திற்குப் பின் நெஞ்சு எரிச்சல் முற்றிலும் நீங்கி நல்ல சுகத்துடன் இருக்கிறார்.

ஒரு விஷ பூச்சி நாங்கள் நடத்தி வருகிற கடைக்குள் 12 வருடங்களாக வந்துக்கொண்டே இருந்தது. அதற்காகவும் ஜெபித்து சென்றோம். கூட்டத்திற்கு வந்துச் சென்ற அந்த நாளிலிருந்து அந்த பூச்சி வருவது இல்லை.

எனக்கு கொத்து கொத்தாக முடி உதிரும் பிரச்சனை இருந்தது. ஜெப வேளையில் ஐயா அவர்கள் முடி உதிரும் பிரச்சனை உள்ளவர்களை கர்த்தர் சுகமாக்குகிறார் என சொன்னார்கள். நான் எனக்கு என விசுவாசித்து ஜெபித்து சென்றேன். அந்த நாள் முதல் முடி கொட்டும் பிரச்சனையும் நீங்கிவிட்டது. இந்த மூன்று அற்புதங்களை செய்த கர்த்தரை துதிக்கிறேன்.

- திருமதி. அமுதவள்ளி, தோகைமலை.

## அன்பரின் ஊழிய பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த மகத்தான செயல்கள்!



1991–ம் ஆண்டிலிருந்து அன்பரின் ஊழிய பங்காளராக நாங்கள் இருந்து வருகிறோம். என் மனைவிக்கு 10 வருடங்களாக அலர்ஜி பிரச்சனை இருந்தது. அதனால் உடல் நலத்தில் குறைவு ஏற்பட்டது. அதற்கான சிகிச்சைகள் எடுத்து மருந்து சாப்பிட்டு வந்தார்கள். ஆனால் சுகம் கிடைக்கவில்லை. ஒருநாள் இரவு மிகவும் பெலவீனத்திற்கு உள்ளானார்கள். உடனே Dr.ஆனந்த ஸ்திரா அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தொடர்புக் கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் அந்த நிமிடமே அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார்.

எனக்கு ஸ்பான்டிலைடிஸ் (Spondylitis) பிரச்சனை ஏற்பட்டு ரொம்ப கஷ்டப்பட்டேன். அதற்காகவும் ஐயா ஜெபித்தார்கள். எந்த ஆப்ரேஷனும் இல்லாமல் கர்த்தர் பரிபூரண சுகத்தை எனக்குத் தந்தார்.

என் மகனுடைய திருமணத்தில் தடை இருந்தது. அதற்காகவும் ஐயா ஜெபித்தார்கள். தடைநீங்கி திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்கிற ஐயா, பாஸ்டர் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.

- திரு. இராமலிங்கம், மேற்கு தாம்பரம்.


அனுதின அற்புதம்
DAILY MIRACLE
MINISTRY OF JESUS
தினமும் காலை
5 மணி
இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.


CAMERA MAN / VIDEO EDITORS
GRAPHIC DESIGNER
(Any UG/PG Candidates)
Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects
Male / Female, Christians Preferred
Apply to: ministryofjesushr@gmail.com


We Are Hiring!!
ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Skills Required : Tally ERP 9
Male / Female || Christians Preferred
ministryofjesushr@gmail.com

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

...தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான். (நீதி.14:31)
திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்.
...பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.(யாக்கோபு 1:27)

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு சேலம் மாவட்டம் அக்ரஹாரம் பகுதியில் உள்ள நமது டியுஷன் சென்டரில் படிக்கிற ஏழை மாணவ மாணவியர்கள் 100 பேருக்கு S.J.SAVES TRUST-ன் ஸ்தாபகர் ஐயா Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் புத்தாடைகளை வழங்கினார்கள். பிள்ளைகளுக்கு கல்வி உபகரணங்கள். விளையாட்டு பொருட்கள் தரப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் பிரியாணி. கேக் சாப்பிட்டு. கையில் இனிப்பு வகைகளை பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு சென்றனர்.

இன்னும் நாம் 400 பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்க வேண்டியுள்ளது. உங்களுடைய தாராளமான நன்கொடைகளை பெற்று S.J.SAVES TRUST டியூஷன் சென்டரில் படிக்கிற ஏழை எளிய பிள்ளைகளுக்கு புத்தாடைகளை வழங்கயிருக்கிறோம்.

விதவைப் பெண்கள் மற்றும் ஆதரவற்ற வயதானவர்களுக்கும் புத்தாடைகள் வழங்க வேண்டும்.

ஆகவே கீழ்க்கண்ட இந்த account எண்ணிற்கு உங்கள் குடும்பத்தின் சார்பாக நன்கொடையை அனுப்பி உற்சாகமாய் தாங்குங்கள். அதற்குரிய பலனை கர்த்தர் உங்களுக்கு பல ஆயிரம் மடங்காக தந்து ஆசீர்வதிப்பார்.





### S.J.SAVES TRUST account details

**SJ SAVES TRUST**
**A/C NO.019150310875369**
**Tamilnadu Mercantile Bank Palakarai, Trichy.**
**IFSC Code : TMBL0000019**
(80G) வரி விலக்கு உண்டு.




















## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## வங்கிக் கணக்குகளின் விபரம்



**DR. ANANDA STIRA**
**A/C NO. 10848469699**

**ANBARIN OOZHIYAM**
**A/C NO. 10848559426**

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869**

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)

## மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

**Bank A/c. Name : SJ SAVES TRUST**
**Account No. 36477148891**
**Bank Name : State Bank of India**
**Branch : Cantonment, Trichy Main Branch**
**IFSC Code : SBIN 0000930**
**A/c Type : Current**



# உலக செய்திகள்



ஒலியை விட 5 மடங்கு வேகமாக செல்லும் இந்தியாவின் முதல் நீண்ட தூர ஹைப்பர் சோனிக் ஏவுகணை சோதனையை ஒடிசா கடற் பகுதியில் உள்ள அபதுல்கலாம் தீவில் இந்திய பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக நடத்தியது. இந்த ஏவுகணை பல்வேறு வகையான எரிபொருள்களுடன் 1,500 கி.மீ. தொலைவுக்கு அப்பால் சென்று தாக்கும் திறன் பெற்றது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) முதல் விண்வெளி பயணமான "சுகன்யான்" திட்டத்தை செயல்படுத்துவதில் இஸ்ரோ விஞ்ஞானிகள் முனைப்பு காட்டி வருகின்றனர். இதில் தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் ரஷியாவில் பயிற்சியை முடித்து திரும்பினர். இதனை தொடர்ந்து தற்போது அமெரிக்காவிலும் ஆரம்ப கட்டப் பயிற்சியை முடித்து உள்ளனர். நாசா – இஸ்ரோ கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாக அடுத்த ஆண்டு ஏப்ரலில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு இந்திய விண்வெளி வீரர் ஒருவர் பறக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

பயிற்சியின் முதல் கட்டத்தில், பணியின் பல்வேறு நிலைகள், தரை வசதி சுற்றுப்பயணங்கள், அமெரிக்க சுற்றுப்பாதைப் பிரிவு மற்றும் நுண் புவியீர்ப்பு விசையில் அறிவியல் ஆராய்ச்சி உள்ளிட்டவை குறித்து பயிற்சி பெற்று உள்ளனர். அத்துடன், விண்வெளி உணவு விருப்பங்கள், ஸ்பேஸ்–எக்ஸ் டிராகன் விண்கலம் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள முக்கிய அமைப்புகள் ஆகியவற்றைப் பற்றியும் நன்கு அறிந்துள்ளனர்.

மெக்சிகோவில் கருக்கலைப்பு என்பது மனித உரிமையை மீறும் செயல் ஆகும். இந்த நிலையில் 12 வாரங்கள் வரை உள்ள கருவை கலைக்க அனுமதி வழங்கும் மசோதா மெக்சிகோ மாகாண சட்ட மன்றத்தில அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு அரசாங்கம் தற்போது ஒப்புதல் வழங்கி உள்ளது.

சீனாவின் ஒரு அங்கமாக இருந்த தைவானை மீண்டும் தன்னுடன் இணைத்துக்கொள்ள அந்த நாடு துடிக்கிறது. ஆனால் தைவானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல்படுகிறது. எனவே தைவான் ஜலசந்தியில் அமெரிக்க போர் விமானங்கள் செல்வதை கண்காணிக்க சீனா கடற்படை கப்பல் மற்றும் விமானத்தை அனுப்பி உள்ளது.

நமீபியாவில் நவம்பர் 27 அன்று தேர்தல் நடந்தது. அந்த நாட்டில் உள்ள வாக்குச்சாவடிகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் வந்து வாக்களித்தனர். இதனை தொடர்ந்து அங்கு உடனடியாக வாக்குகள் எண்ணப்பட உள்ளது. தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளரான நேதும் போநன்டி அந்த நாட்டின் முதல் பெண் அதிபராக வெற்றிப்பெற்று ஆட்சி அமைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

ஜனவரி 25 சனிக்கிழமை

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெப மையம்,
10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர்,
திருச்சி – 18.

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

---

நாசரேத்தில்

GAMA வழங்கும்

25 YEAR ANNIVERSARY

# 25வது வெள்ளி விழா ஆண்டு அபிஷேக பெருவிழா

நாள் : ஜனவரி 31, பிப்ரவரி 1,2
(வெள்ளி, சனி, ஞாயிறு)

இடம் : தூய யோவான் பேராலய வளாகம், நாசரேத்.
நேரம் : தினமும் மாலை 6.00 மணி

தலைமை : Rev. பொன்செல்வின் அசோக்குமார்
Rev. ஹென்றி ஜீவானந்தம்
(பேராலய திருப்பணி விடையாளர்கள்)



தேவ செய்தி

Dr. ஆனந்த ஸ்திரா

Dr. ஜேன் ஜாஷ்வா



தொடர்புக்கு : 94888 45627 & 0431 2741925

Tamil Whats App No. + 91 95004 87059







Telugu Whats App No. + 91 91770 87860

## தற்கொலை எண்ணத்திலிருந்து கர்த்தர் விடுதலையாக்கினார்!



என் பெயர் லூர்து தீபிகா. என் வாழ்வில் நான் மிகவும் சோர்ந்துப் போயிருந்தேன். எனக்குள் ஒருவித விரக்தி ஏற்பட்டது. நீ ஏன் உயிரோடு இருக்கிறாய்? "உன்னை நீயே மாய்த்துக்கொள்" என்ற ஒரு எண்ணம் அடிக்கடி எனக்குள் வருவதுண்டு. திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் முதன் முறையாக நான் கலந்து கொண்டேன். கூட்டத்திற்கு வந்தப்பிறகும் வீட்டுக்கு திரும்பி போகனுமா? செத்துப் போயிடலாம் என்ற எண்ணம் எனக்குள் வந்துக்கொண்டே இருந்தது.

ஜெப வேளையில் நான் அழுதுக்கொண்டே இருந்தேன். அந்த நேரத்தில் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்கள், "தற்கொலை எண்ணத்துடன் இங்கு வந்திருக்கிற ஒருவரை கர்த்தர் இப்பொழுது விடுதலையாக்கு கிறார்" என சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. உடனே நான் முன்பாக வந்தப்பொழுது பாஸ்டர் எனக்காக ஜெபித்தார்கள். அந்த நிமிடமே எனக்குள் இருந்த பொல்லாத ஆவியின் கிரியைகள் என்னைவிட்டு விலகினதை உணர்ந்தேன். இதயத்திலிருந்த பாரம் என்னைவிட்டு நீங்கியது, என்னையும் அறியாமல் சந்தோஷம் என்னை நிரப்பியது. தற்கொலை எண்ணம் என்னைவிட்டு அகன்றது. விடுதலைக் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. லூர்து தீபிகா. துவாக்குடி.

joshua@mojindia.org


# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

ஞாயிறு தோறும் காலை 9:30 மணி - 11:30 மணி

அபிஷேகம் நிறைந்த பாடல்கள், அனல் மூட்டும் தேவ செய்தி, உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.




Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2025-2027 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

மேற்கு தாம்பரத்தில் **உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்**

9:30AM to 1:00PM

2025
ஜனவரி
**11**
சனிக்கிழமை

J.J. மஹால். L.K.S. தங்க மாளிகை எதிரில்.
G.S.T.மெயின் ரோடு. கடப்பேரி.
மேற்கு தாம்பரம். சென்னை.

புதுவருட வாக்குத்தத்த செய்தி

**Rev.Dr.A.ஜாஷ்வா**



# அற்புத குடும்ப ஆசீர்வாத கூட்டம்

நாகர்கோவிலில்
ஜனவரி
**14**
செவ்வாய்க்கிழமை

தேவ செய்தி
**Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**
**9:30 AM to 2:00 PM**

திருநெல்வேலியில்
ஜனவரி
**15**
புதன்கிழமை

SGS டிலைட் ஹால். WCC ரோடு.
நாகர்கோவில்

CSI நூற்றாண்டு மண்டபம். சித்தா கல்லூரி அருகில்.
முருகன் குறிச்சி. பாளையங்கோட்டை



# அற்புதத்தின் மாலை

தூத்துக்குடியில்

ஜனவரி
**16**
வியாழக்கிழமை
4:30 PM to 8:00PM

தேவ செய்தி
**Dr.ஆனந்த ஸ்திரா**

ராஜ் மஹால். பழைய பேருந்து நிலையம் மற்றும் ஹோட்டல் ராஜ் அருகில். தூத்துக்குடி
கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,